ஒரு புதிய அனுபவம்
தினகரன்

# புனித வளனார் பல்கலையின் 2வது ஆண்டு பட்டமளிப்பு விழா



பெங்களூரு, செப்.30: புனித வளனார் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது ஆண்டு பட்டமளிப்பு விழா சனிக்கிழமை காலை 10:00 மணிக்கு முதலிடம் பெற்றவர்கள் மற்றும் சிறப்பு விருது பெற்றவர்களின் அணிவகுப்புடன் துவங்கி, அதனை தொடர்ந்து கௌரவ விருந்தினர்களின் மரியாதை ஊர்வலத்துடன் நடைப்பெற்றது.

இந்த விழாவிற்கு கர்நாடக மாநில ஆளுநர் திரு. தாவர் சந்த் கெஹ்லோத் தலைமை தாங்கினார். உயர் கல்வித் துறை அமைச்சர் டாக்டர் எம்.சி. சுதாகர் மற்றும் தலைமை விருந்தினராக டாக்டர் ஜருகு நரசிம்ம மூர்த்தி (இயக்குனர், இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் IISER, திருவனந்தபுரம்) பங்கேற்றனர். குலாதிபதி அ.மா. திரு. டயோனிசியஸ் வாஸ் (SJ) மற்றும் துணைவேந்தர் அ.மா.திரு.விக்டர்லோபோ (SJ) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆண்டு மொத்தம் 2,747 மாணவர்கள் பட்டம் பெற்றனர். இதில் 2,009 பட்டப்படிப்பு மாணவர்கள் மற்றும் 738 முதுநிலை மாணவர்கள் அடங்குவர். இவர்களில் 143 மாணவர்கள் ரேங்க் ஹோல்டர்களாக அறிவிக்கப்பட்டனர் (99 பட்டப்படிப்பு, 44 முதுநிலை). மேலும், 40 சிறப்பு பரிசுகள் கல்வி, என்.சி.சி., விளையாட்டு மற்றும் துணைநிலைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் டாக்டர். காட்வின் டி'சோசா (தேர்வுக் கட்டுப்பாட்டாளர்), டாக்டர். சையத் வாஜீத் (பதிவாளர்), டாக்டர். ரொனால்ட் ஜே. மஸ்கரேனாஸ் (துணைவேந்தர்), அ.மா.திரு. ஸ்வேபர்ட் டி'சில்வா, SJ (துணை குலாதிபதி), டாக்டர். ரெஜினா மத்தியாஸ் (துணைவேந்தர்) மற்றும் அ.மா.திரு. அருண் பி.டி.'சோசா, SJ (நிதியாளர்) ஆகியோரும் பங்கேற்றனர்.

1882ல் நிறுவப்பட்ட செயின்ட் ஜோசப் பல்கலைக்கழகம் இவ்வாண்டு தனது 143 ஆண்டுக் கல்வி சேவையை கொண்டாடியது. இப்பட்டமளிப்பு விழா, நிறுவனர்களின் நோக்கு, பேராசிரியர்களின் அர்ப்பணிப்பு, மாணவர்களின் சாதனை, பெற்றோர்களின் மற்றும் பழைய மாணவர்களின் பங்களிப்பு ஆகியவற்றுக்கு பாராட்டி செலுத்தியது. கி.பி 1882-இல் இருந்து உயர்க்கல்வி மையங்களில் இந்தியாவின் பழமையான உயர் கல்வி நிறுவனங்களில் ஒன்றாகவும் தமிழை ஒரு மொழி பாடமாகவும் பட்டமளிப்பு விழா மூலம் உறுதி செய்யப்பட்டது.